பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஞூ புரட்டாதி மீ 21 உ ஞாயிற்றுக்கிழமை (07-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 17 கதிர்: 214

# கிழக்கில் 65,000 தமிழ் அகதிகள்

# காடுகளுக்குள் தப்பி ஓட்டம்!

## அச்சுறுத்தலினால் நிர்க்கதி நிலை

கொழும்பு, அக்டோபர் 7

வந்தாறுமூலையில் உள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம், சித்தாண்டி முருகன் ஆலயம், கிரான் ஆச்சிரமம், கோரகல்லி மடு பாடசாலை ஆகியவற்றில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த 15 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆயிரம் தமிழ் அகதிகள் காடுகளுக்கு தப்பி ஓடி நிர்க்கதியாகியுள்ளனர். கொழும்பில் சுயாதீன செய்திச் சேவைகள் இத்தகவலை வெளியிட்டன.

ஆயுதபாணிகள் குழு ஒன்று சில தினங்களுக்கு முன் விடுத்த அச்சுறுத்தல் காரணமாகவே அகதிகள் தப்பி ஓடியதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

ஆயுதப் படையினரும் ஆயுதப் படையின் துணையுடன் இயங்கும் சில முஸ்லிம் ஆயுதக் குழுக்களும் விடுத்த அச்சுறுத்தல்களை அடுத்தே இந்த அகதிகள் அகதி முகாம்களை விட்டு தப்பி ஓடியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அகதிகள் வெளியேறியதை அடுத்து வந்தாறுமூலை பல்கலைக்கழகம் தற்போது மனித சஞ்சாரமற்றுக் காணப்படுகின்றது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## துணைப்படைக்கு மேலும் 50,000 பேரை திரட்ட முயற்சி

கொழும்பு, அக். 7

இராணுவ துணைப்படைக்கு மேலும் ஆட்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

துணைப்படைக்கு மேலும் 50 ஆயிரம் பேரை சேர்க்க வழிசெய்யும் வர்த்தமானி பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

இத்துணைப்படையானது ஐந்நூறுக்கு மேற்படாத பிரிவுகளைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு பிரிவிலும் 100 உறுப்பினர்கள் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## யாழ். நகருக்குள் செல்ல பொதுமக்களுக்கு அனுமதி

யாழ். நகரின் சகல வீதிகளும் நேற்று மக்களின் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டன.

இதனால் நேற்றுக் காலை முதல் மக்களின் நடமாட்டம் நகரப் பகுதியில் அதிகரித்திருந்தது.

மக்கள் தமது வீடு. வாசல்கள், கட்டடங்களைப்பார்வையிடுவதைக் காணக்கூடியதாக இருந்தது. சேதமடைந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் அந்த வீடுகளில்இருந்து தமது உடைமைகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

சேதமடைந்த கடைகளிலிருந்தும் பொருள்கள் அப்புறப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. (இ-6)

## வாகனம் செல்ல முடியாத நிலையில் நகர வீதிகள்

யாழ். நகரப்பகுதி வீதிகளில் பல வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் இருப்பதை நேற்றுக் காணக் கூடியதாக இருந்தது.

பல வீதிகளில் கட்டட இடிபாடுகள், கண்ணாடிச்சிதறல்கள் இன்னும் காணப்படுகின்றன. வீதிக்கு குறுக்காக மின் கம்பங்களும் வீழ்ந்து கிடக்கின்றன. வீதி ஓரங்களில் புல்லுகள்- செடி கொடிகள் வளர்ந்து காணப்படுகின்றன.

விமானக் குண்டு வீச்சுக்களால் தரைமட்டமான கட்டடங்களைச் சுற்றியும் செடி, கொடிகள் வளர்ந்து மூடி உள்ளன.

நகரில் 90 சதவீதமான கட்டடங்கள் இராணுவ நடவடிக்கையால் ஏதோ ஒரு விதத்தில் சேதமடைந்து காணப்படுகின்றன. (இ-6)

## வவுனியாவுக்கான மினிபஸ் சேவையும் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 7

நேற்று முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கான மினிபஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

அதே சமயம் உள்ளூர் மினி பஸ் சேவைகளும் விஸ்தரிக்கப்பட்டன.

கேரதீவுக்கும், சாவகச்சேரிக்கும் நேற்று முதல் தடவையாக மினி பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

வட பிராந்திய மினிபஸ் சங்கத்தினால் நடத்தப்படும் இந்த பஸ் சேவைகள் நல்லூர் முத்திரைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகின்றன. (இ-6)

## மாகாண உயரதிகாரிகளுக்கு அதிர்ச்சி காத்திருக்கிறது!

திருகோணமலை, அக். 7

திருகோணமலை மாகாண சபையில் கடமையாற்றிய பதில் செயலாளர்களுக்கும் பொறுப்பான பதவியில் உள்ளவர்களுக்கும் வேலைக்குத் திரும்பும்போது அதிர்ச்சி காத்திருக்கிறது.

ஜூன் மாதம் 11ஆம்திகதிக்குப்பின் வேலைக்குச் சமுகமளிக்காது யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் தங்கியுள்ள மாகாணசபைப் பதில் செயலாளர்களுக்கும் பொறுப்புவாய்ந்த பதவியில் உள்ளவர்களுக்கும் கொழும்பில் இருந்து வந்த முக்கிய கடிதம் ஒன்று அவரவர் அலுவலகங்களில் இருப்பதாக அங்கிருந்துவந்த அரச ஊழியர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இங்கு இ...

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜே.வி.பி உயர்மட்ட தலைவரை மடக்க பொலீஸார் படாதபாடு

கொழும்பு, அக். 7

தென்னிலங்கையில் ஜே. வி. பி. யினர் வெகு வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாக பொலீஸாருக்குத் தகவல் கிடைத்து வருகின்றனவாம்.

இத்தகவல்களைக் கொண்டு தென்னிலங்கைத் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை கண்டுபிடித்து அவர்களை மடக்கிப் பிடிக்கக் கூடியதாக உள்ளதாம்.

கடந்தவாரத்தில் எம்பிலிப்பிட்டியாவில் உள்ள கனேகந்த என்ற இடத்தில் 25 ஜே. வி பி சந்தேக நபர்களைப் பொலீஸார் கைதுசெய்தனர். பெருந்தொகையான ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சமீபகாலமாக இதேபோல மாத்தறை களுத்துறைப் பகுதிகளில் தீவிரவாதிகள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜே. வி. பி. மீண்டும் புத்துயிர் பெற்று வருவதையே இது காட்டுகிறது என அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை ஜே வி பியின் உயிர் தப்பியிருக்கும் உயர் மட்டத் தலைவர்களில் ஒருவரான சோமவன்ச அமரவன்சவைக் கைது செய்வதற்கு அரசு வலை விரித்துள்ளது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழகத்தில் 1,18,000 அகதிகள்

தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் உள்ள 320 முகாம்களில் ஒரு லட்சத்து 18 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தற்சமயம் தங்கி உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் மறுவாழ்வுத் துறை சிறப்பு ஆணையாளர் சி. எம். இராம்தாஸ் மதுரையில் இத்தகவலைத் தெரிவித்தார். (இ-எ)

## ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், அக். 7

நேற்று மாலை 5.15 மணியளவில் யாழ் நகரப்பகுதிக்கு வந்த ஹெலிக்கொப்டர்ஒன்று யாழ் நகரம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளை வட்டமிட்டு துண்டுப் பிரசுரங்களைவீசியது. (உ-6)

## மிதிவெடியில் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், அக். 7

மிதிவெடியில் சிக்கிய ஒருவர் இடது காலை இழந்தார்.

நேற்று சனிக்கிழமை காங்கேசன்துறையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தாவடி தெற்கைச் சேர்ந்த முருகேசு இரத்தினசிங்கம் [வயது 32] என்பவரே காலை இழந்தவராவார். மாணிப்பாயிலுள்ள யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். [இ-15]

## திருமலைக்குக் கடிதங்கள் அனுப்ப விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 7

திருகோணமலைக்கு உரிய கடிதங்களை, நாளை திங்கட்கிழமை பருத்தித்துறையிலிருந்து புறப்படும் 'பிங்கோ ரேட்ஸ்' கப்பலில் அனுப்புவதற்கு ஏற்பாடாகி உள்ளது.

பிரஸ்தாப கப்பல் திருகோணமலையூடாக கொழும்பு செல்ல இருப்பதால் கொழும்புக்கான தபாற் பொதிகளுடன் திருமலைக்கு உரிய பொதிகளையும் எடுத்துச் செல்ல இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதனால், திருமலைக்குரிய பொதிகளை இன்று(ஞாயிறு)

[6 ஆம் பக்கம் பார்க்க]

ஊர்காவற்றுறையில்

## குடியிருப்புகளை நோக்கி மிகத் தீவிர ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், அக். 7

ஊர்காவற்றுறை செண். அந்தனீஸ் கல்லூரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கரம்பன், சரவணைப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை நோக்கித் தீவிரமாகச் ஷெல்களை ஏவி வருகின்றனர்.

பிரஸ்தாப பகுதிகளில் தினமும் சரமாரியான ஷெல் தாக்குதல்களும், கலிபர் வேட்டுக்களும் தீர்க்கப்படுகின்றன.

இதே வேளை கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் உட்பட ஐந்துபேர் காயமுற்றனர்.

அந்தனீஸ் கல்லூரியில் இருந்து ''பாதை'' மூலம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள 36 H P லிஸ்ட்டர் என்ஜின் விற்பனைக்கு உண்டு தொடர்பு; ந நடராஜமணி, ஆசிரியர் மில் ஒழுங்கை, மல்லாகம். (14369)

### தேவை

தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்த பெண்பிள்ளை தட்டச்சு நிறுவனத்துக்கு உடன் தேவை. Fudo Enter Pris. பிரதான வீதி, மானிப்பாய். (Bank - Shiva Studio அருகாமையில்) [சி-5230]

### போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவர் இட்டு உடனடியாகப் பெற்றுக்கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதன் வீதி. பிறவுண் றோட் யாழ்ப்பாணம். நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வேலை நேரம் தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. [14362]

### சேவை

Old Park Chinese Restaurant ஸ்தாபனத்தார் மீண்டும் தமது சேவையை ஆரம்பித்துள்ளார்கள். காலை 8 மணிமுதல் மாலை 8 மணி வரை திறந்திருக்கும் (14356)

### றோனியோ

மீண்டும் றோனியோ தமிழ் ஆங்கில தட்டச்சு சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம் இல. 138. நாவலர் றோட், யாழ்ப்பாணம். நேரம்: காலை 9 00 - 12.00 மணி வரை (14372)

### கல்வி

G C. E. (O L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்பஅறிவேயில்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி அல்லது வேல்முருகன் ஸ்ரோர்ஸ், 390, கச்சேரி, நல்லூர் வீதி. (யாழ்ப்பாணம். (14375

## இராமநாதன் கல்லூரியில்

யாழ்ப்பாணம், அக்,7

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியை மீளத் திறப்பது சம்பந்தமாக ஆராய ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளுக்கான பொதுக்கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 30 மணி அளவில் கல்லூரியில் நடைபெறும்.

# 4மாதங்களாகியும் ஒய்வூதியமில்லை

# இனியாவது வழி பிறக்கமாட்டாதா?

## ஓய்வூதியர்கள் கவலை

யாழ்ப்பாணம், அக் 7

கடந்த நான்கு மாதங்களாக ஓய்வூதியர்கள் பலர் கொடுப்பனவு எதுவும் பெற முடியாத நிலையில் பெரும் சஷ்டமான வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் தமது கஷ்ட நிலைமை தீர இனியாவது வழி பிறக்க மாட்டாதா? என்று பலரும் கவலையுடன் கேட்கிறார்கள்.

கடந்த ஜூன், ஜூலை. ஆகஸ்ட் மாதங்களுக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் கிடைத்தும் இதுவரை பணம் வழங்கப்படாததால் பல ஒய்வூதியர்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாத வவுச்சர் இன்னும் கிடைக்கவில்லை.

10 ஆயிரம்ஒய்வூதியர்களைக் கொண்ட இந்த மாவட்டத்தில் 30 சத வீதமானவர்கள் மட்டும் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கின்றனர்.

அவர்களுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் தவணை அடிப்படையில் ஓரளவு பணத்தை வழங்கி வருகின்றன. எனினும் பலருக்கு முழுப்பணமும் வழங்கப்படுவதில்லை. ஒய்வூதியர்களின் மிகுதி 70சதவீதமானோர் மக்கள் வங்கி. இலங்கை வங்கி மற்றும் தனியார் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கிறார்கள்.

செயலக அதிகாரிகள் வவுச்சர்களைக் கொடுத்தால் போதும் என்ற நிலையிலேயே இருக்கிறார்கள்.

பணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றஎண்ணம் அவர்களுக்கு கிடையாது என்று ஒய்வூதியர்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

வங்கிகள் செயல்படாத விடத்து மாற்று ஏற்பாடு எதுவும் செய்ய அரச அதிபரோ, செயலக ஓய்வூதியர் கிளை அதிகாரிகளோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## ஓராம் ஆண்டு திதியும் நினைவஞ்சலியும்



அமரர்
இராசநாயகம்
சந்திரசேகரி

தோற்றம்; 24 - 12 - 1925

மறைவு; 17 - 09 - 1989

அன்பின், பண்பின் பாசத்தின் திருவுருவாய் சிந்தை கவர்ந்து யாவரும் புகழ்பாட வாழ்ந்தீர்கள் இப்பாரினில் யாவரும் உங்கள் சேவைகளை மறந்ததில்லை இதய தீபமே! எங்களைப் பிரிந்து ஓராண்டாயினும் எமது இதயக் குமுறலைகள் ஓயவில்லையே! உங்கள் நினைவலைகள் எம் உள்ளங்களில் பெரும் புயலாக வீசுகின்றனவே! பாரினில் எம்மைப் பாங்காக வாழவைத்த கணவரே, பாசத் தந்தையே அன்புச் சகோதரரே உங்கள் பிரிவால் சதா கண்ணீர் வடிக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்,
மைத்துனர் குடும்பம்,
சகோதர சகோதரியின்,
பிள்ளைகள்.

15ஆம் கட்டையடி,
ஜெப இல்லம்,
[illegible] (14376)

## சிநோர் ஸ்தாபன அறிவித்தல்

குருநகர். காரைநகர் ஊழியர்கள் அனைவரும் 08 - 10 - 90 காலை 8 மணிக்கு குருநகர் தொழிற் சாலைக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்படுகிறீர்கள்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
சிநோர்.

[14380]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி ஞானம்மா பொன்னையா

(சாவகச்சேரி)

அன்புடனும் பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்த தாயே உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சங்களை விட்டு அகலாது.

08-09-90 அன்று நடைபெற்ற அன்னாரது ஈமக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு 08 10-90 அன்று எமது வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'இந்திரபதி'
நுணாவில், சாவகச்சேரி. [சி-5224]

# மரண அறிவித்தல்கள்

## திரு. தட்சணாமூர்த்தி - சத்தியமூர்த்தி

(பட வரைஞர், D O A. மகாவலி அபிவிருத்திச் சபை)

வல்வெட்டி கம்பர்மலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், 29/6, லியனகே மாவத்தை, தெகிவலையில் வசித்தவருமாகிய திரு. த. சத்தியமூர்த்தி 05-10-90 வெள்ளியன்று சிவபதமெய்தினார்.

இவர் திருமதி பொன்னம்மா சத்தியமூர்த்தியின் (சங்கீத பூசணம் இசுப்பத்தானை மாகாவித்தியாலயம் பம்பலப்பிட்டி) கணவரும், ரமேஸின் (மாணவன் - இந்துக்கல்லூரி - கொழும்பு) தகப்பனாரும், கோவிந்தராசா (சங்கீத பூசணம் - நல்லூர்), மகாராஜா (பலநோக்கு கூட்டுறவுசங்கம்-தெல்லிப்பழை), நந்தகோபாலன் குருக்கள் பிள்ளையார் கோவில - நெடியகாடு), திருமதி கதிரமலை பராசக்தி (கமலா) செட்டித்தெரு, நல்லூர் ஆகியோரின் மைத்துனரும், சதிரமலை ஜெயவாணியின் சிறிய தகப்பனாரும், கணபதிப்பிள்ளை ஸ்ரீ ராஜ்குமாரின் (மாணவன்-இந்துக்கல்லூரி - கொழும்பு) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06-10-90 இல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;

சொ. கதிரமலை [சகலன்]

96, செட்டித்தெரு,
நல்லூர். [14378]

## அப்பாத்துரை மாசிலாமணி

(பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை [வவுனியா] இளைப்பாறிய பொறியியலாளர் பெருந் தெருக்கள் திணைக்களம்]

அராலி தெற்கு வாசியான அ. மாசிலாமணி அவர்கள் 04 - 10 - 90 வியாழக்கிழமை சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற அப்பாத்துரை ஆச்சிமுத்து தம்பதிகளின் அருமை மகனும்; கமலாம்பிகாவின் அன்புக் கணவரும்; கேசவன், ஜெகநாதன், சாந்தினி, பிரியதர்சினி, ஆகியோரின் அன்புத் தந்தையும்; Dr. மகாலிங்கம் [பிபிலை], கணக்காளர் சுப்பிரமணியம் [கனடா], காலஞ்சென்ற தபாலதிபர் இரத்தினம், கணக்காளர் கணேஷ் [பாற்சபை நாரகேன்பிட்டி], ஆசிரியர் குணசிங்கம் [யா/கோண்டாவில் இந்துமாவித்தியாலயம்], திருமதி ந. ஜீவரத்தினா ஆகியோரின் அன்புச் சகோதரரும்; இ. கந்தமுத்து [J.P] அவர்களின் மருமகனும்; பாலசுப்பிரமணியத்தின் [யாழ். போதனா வைத்திய சாலை] சகலனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 04 - 10 - 90 மாலை 5 00 மணியளவில் அராலி தெற்கு, பூனாவடை இந்து மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. குணசிங்கம்,

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [14357]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

### வேலுபிள்ளை பாலகிருஷ்ணபத்தர்

அன்னையின் மடியில்: 20- 08- 1918

ஆண்டவன் அடியில்: 08- 09- 1990

எமது குடும்பத்தின் தலைவராய், அன்புக்கும், பாசத்துக்கும் உரிய தந்தையாய் வாழ்ந்து உங்கள் சுக போகங்களை மறந்து மனைவி. பிள்ளைகளுக்காய் வாழ்ந்து எழுபத்திரண்டு வயதில் இறைவனடி சேர்ந்தீர்களே ஐயா! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சிவபதமடைந்து31 நாட்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் அகலாது.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை நாளை [08- 10- 1990) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகல வழிகளிலும் உதவிகள் செய்த உற்றார், நண்பர்கள். இறந்த செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்து கொண்டு இப்பொழுது நாட்டில் உள்ள நிலைமையால் போக்குவரத்து, தொலைத்தொடர்பு இல்லாதபடியால் இறந்த செய்தியை அறிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக் கொண்டு வரவும்,

இங்ஙனம்:
அவர் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வெள்ள வாய்க்கால் ஒழுங்கை,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை. (14371]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரப் பகுதி சேதங்களை மதிப்பிடும் வேலை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக் 7

யாழ். மாநகரசபைப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகள் நாளை திங்கள் முதல் 10 நாட்களுக்கு மேற்கொள்ளப்படும்.

யாழ் மாநகரசபைக்குட்பட்ட யாழ் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கிராமசேவையாளர் பகுதிகள் வாரியாக இந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

கடைகள், கட்டடங்கள், வீடுகள் உடபட சகல சேதங்களும் மதிப்பீடு செய்யப்பட உள்ளன.

கிராமசேவையாளர், தொழில்நுட்பவியலாளர், பொறியியலாளர் ஆகியோர் அங்கம் பெறத்தக்க வகையில் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மாநகர எல்லைக்குள் உள்ள அரசாங்கத் திணைக்களங்களுக்கு ஏற்பட்ட சேதங்களையும் இந்தக் குழுவே மதிப்பீடு செய்யும்.

இதற்காக யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 28 குழுக்களும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 19 குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. [இ-143 3]

## திருமலை ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 7

மீளக் கடமைக்குச் செல்வது பற்றி ஆராய்வதற்காக, திருகோணமலையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் நாளை காலை 10 மணிக்கு யாழ் கச்சேரிக்கு அண்மையிலுள்ள வர்த்தகத் திணைக்களத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது [உ-6]

## மாகாணசபை ஊழியர்

## தராதரம் உள்ளோருக்கு மீண்டும் வேலை கிடைக்கும்

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டு, வேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட இருக்கிறது.

ஏற்கனவே மாகாண சபையில் சமயாசமய அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டவர்களை வேலை நீக்கம் செய்யுமாறு மாகாண சபை அனுப்பிய சுற்று நிருபத்தின் படி அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

நேற்று மாகாண சபையில் இருந்து வந்த சுற்று நிருபத்தில், தராதரம் உள்ளவர்களுக்கு மட்டும் மீண்டும் வேலை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


## சுகத்துடன் இருக்கிறார்

செங்கலடி, சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த செல்லத்துரை மாஸ்ரர் [சுவாமியார்] அவர்கள் பூரண சுகத்துடன் இருப்பதாக அவரது அன்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சிவதொண்டன் நிலையம்

434, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 7-10-90 [சி/5237]



பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் - பளை (மட்டுப்படுத்தப்பட்டது)

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் 101-09

சம்பளத்திட்ட நிரல் ரூபா 905/- — 1605/- / 40 x 5 — 50 x 10

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமையாளர் / மேற்பார்வை மட்டத்திலான 3 வருடங்கள் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் 6 வருடங்கள் குறையாத அனுபவம்;

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது அதற்கிணையான தகைமை.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

வயது 23 வருடங்களுக்கும் 50 வருடங்களுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து (30 - 10 - 90) ஆம் திகதிக்கு முன் தலைவர் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், பளை. என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறிப்பு: சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி தெ. ப. பொ. உ. வி.
கூட்டுறவுச் சங்கம்,
பளை.

திகதி: 05 - 10 - 90 [14368]


## மட்டக்களப்பில் பாடசாலைகள் இயங்கவில்லை

மட்டக்களப்பு, அக். 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னமும் பாடசாலைகள் சீராக இயங்கத் தொடங்கவில்லை.

இங்குள்ள பல பாடசாலைகளும் அகதி முகாம்களாக இருப்பதாலும், மாணவர்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து சென்றுவிட்டதாலுமே பாடசாலைகள் இயங்கவில்லை என அறிய வருகிறது. [உ-6]

## அகதிகள் அதிகரிப்பு

கொழும்பு, அக். 7

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தங்கியுள்ள அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது இதனால் அங்கு பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து வரும் தமிழ் மக்கள் பலர் தினசரி இங்கு அணிகளாக வந்து தஞ்சம் புகுகின்றனர்.

தற்போது இங்குள்ள அகதிகளின் எண்ணிக்கை ஐந்தாயிரத்தைத் தாண்டி விட்டதாகவும் அறிய வந்தது

இதேசமயம் வேறு தமிழ்ப் பகுதிகளுக்கு போக்குவரத்து செய்யும் தமிழர்களும் இடையில் இங்கு வந்து தங்கிச் செல்வதாக கூறப்பட்டது. (உ-6)

## பல அரச அலுவலகங்கள் முல்லைத்தீவில் செயலிழப்பு

முல்லைத்தீவு நகரில் பெரும்பாலான அரச அலுவலகங்கள் செயல் இழந்துள்ளன.

செயலகம், வைத்தியசாலை, வங்கிகள், கல்வி அலுவலகம், நகரசபை, தபாலகம் ஆகியவையே செயல் இழந்தவை ஆகும். (இ-3)

## இயங்காத பாடசாலைகளின் ஆசிரியருக்கு இடமாற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்காத பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான இடமாற்ற கடிதங்களை புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக இயங்கும் கல்வி அலுவலகத்தில் பெற்று புதிய பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு ஆசிரியர்கள் கோரப்பட்டுள்ளனர். [இ-3]

## வெளிவாரிப் பரீட்சைக்கு 15 வரை விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம். அக். 7

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 15ஆம் திகதிவரை அனுப்ப முடியும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

1990-91ஆம் ஆண்டுக்குரிய வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித் திகதி முடிவடைந்திருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து மாணவர்கள் தோற்ற வசதியாகவே இந்த திகதி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. [இ-3 7]

## திருக்கோணேஸ்வரத்தில் வழிபாட்டுக்கு அனுமதி மறுப்பு

திருகோணமலை, அக். 7

திருகோணமலையில் உள்ள முக்கிய ஆலயங்களுக்கும், கோணேஸ்வரம் ஆலயத்துக்கும் வழிபாட்டுக்காக இந்துக்கள் சென்றால், அவர்களைப் படையினர் அனுமதிக்கிறார்கள் இல்லையாம்

ஆலய சுற்றாடலில் மிதிவெடிகள் உள்ளன என்றும், அங்கு சென்றால் உயிராபத்து ஏற்படும் என்றும் படையினர் காரணம் கூறுகிறார்கள். [இ-3]

## நல்ல இன விதை நெல் பெற முடியாது விவசாயிகள் கஷ்டம்

முல்லைத்தீவில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையால் காலபோக விவசாயிகள் நல்ல இன விதை நெல்லைப் பெறமுடியாத நிலையில் இருந்துவருகின்றனர்.

இப்பகுதியில் கிருமிநாசினிகள், உரவகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த காலங்களில் இந்த விதைநெல் ரகங்களை சமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகள் பெற்று [இ-94]

## முல்லைத்தீவுக்குமின் வழங்க இன்னும் அனுமதி இல்லை

முல்லைத்தீவுக்கு மின்சாரம் வழங்க இராணுவம் இன்னும் அனுமதி வழங்கவில்லை

அப்பகுதிக்கு மின்சாரம் கிடைக்காததால் அரிசி ஆலை மற்றும் தொழில் நிறுவனங்கள் இயங்கவில்லை. இதனால் உணவுப் பொருள்களின் விலையும் குறையவில்லை. [இ-94]

# தமிழ்ப் பல்கலைக்கழகங்களை அழியவிட அரசாங்கம் திட்டம்

## மறுமலர்ச்சிக் கழகம் குற்றச்சாட்டு

தமிழ் பேசும் மக்களின் பல்கலைக்கழகங்களை அழியவிடுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றி வருவதாக யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் குற்றஞ்சாட்டி உள்ளது.

இது சம்பந்தமாக மறுமலர்ச்சிக் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று பல வழிகளில் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கி வரும் பேரினவாத ஸ்ரீலங்கா அரசானது தற்போது தமிழ் பேசும் மக்களின் பல்கலைக்கழகங்களாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையும் வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தையும் வடக்கு கிழக்கில் நிலவும் தற்போதைய யுத்த நிலைமையைக் காரணம் காட்டி அப்படியே அழியவிடுவதற்கான திட்டங்களைத் தீட்டி வருகின்றது.

இதன் பிரதிபலிப்புத்தான் அண்மையில் ஸ்ரீ லங்கா அரசினால் வெளியிடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தும்பறை வளாகத்துக்கு மாற்றம் பெறலாமென்ற அறிவிப்பாகும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினடம் தங்களுக்குத் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் விரிவுரைகள் தொடங்கப்படவேண்டுமென்று கேட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது. வடக்கு கிழக்கில் வாழும் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் நலன்களைக் கருத்திற்கொள்ளாது தமதுசுயநலன்களையே முதன்மைப்படுத்தும் இந்த ஒரு சில மாணவர்களால் முழு மாணவ சமுதாயமுமே பாதிப்புக்கு உள்ளாக நேரிடும்.

நமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் ஸ்ரீலங்கா அரசுடனான தொடர்புகள் துண்டிக்கப்படுவது தவிர்க்க முடியாததே இவ்வுண்மையை யாவரும் புரிந்து கொள்வதோடு எமது பல்கலைக்கழகங்களை நாமே சுயமாக திறந்து நடாத்தும் நிலைமைக்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும்

பலத்த சிரமங்களின் மத்தியில் நாம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தையும் அழிய விடுவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் பண்பாடு, மொழி ஆகியவற்றைச் சிதைக்கலாம் என்ற ஸ்ரீலங்கா அரசின் திட்டத்தை முறியடிக்க தமிழீழ மக்களின் கல்விப் பாரம்பரியத்தில் பற்றுக்கொண்ட அனைவரும் முன்வரல் வேண்டும்— என்று உள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் அதிரியார் ஆசீர்பாதம்

அன்னையின் மடியில்: 04 - 03 - 1917
ஆண்டவன் அடியில்: 07 - 10 - 1989

நிலவை வான் பிரிந்திடப் புகினும் - உம்
நினைவை யாம் மறந்திருப்போமோ?
இவ்வுலகை விட்டுயிர் நீத்து
அகவை பலவாய் செலினும் அன்ப நின்
உறவை நாம் மறவோம் மறவோம் எம்
உயிருள்ள வரை மறவோம்.

இவர் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சேந்தாங்குளம்,
இளவாலை.
[14373]

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் செல்லப்பா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய சிறைச்சாலை களஞ்சியப் பொறுப்பாளரும் பாண்டியந்தாழ்வு அருள்மிகு நரசிம்ம ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவும்)

தோற்றம்:- 1' - 02 - 1911
மறைவு:- 25 - 08 - 1990

எமது அன்பின் திருவுருவமாய், பாசத்தின் சிகரமாய், சமூகசமயத் தொண்டனாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் திடீரென எங்களைப் பிரிந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டீர்கள். உங்கள் பாசமும் அன்பும் என்றும் நிலைத்திருக்கும்.

துயர் மிகுந்த இவ்வேளையில் துணையாய் நின்ற அன்புள்ளங்கள், அனுதாபச் செய்திகளால் ஆறுதல் செய்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு 08-10-90 திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய அருள் மிகு நரசிம்ம ஞானவைரவப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவைத் தாங்க முடியாத
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

73, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(1436[illegible]

## துப்பாக்கி வெடித்து காயம்

யாழ்ப்பாணம், அக். 7

காட்டுக்கு வேட்டைக்குச் சென்றோரின் வேட்டைத் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பரப்பக்கால் காட்டுப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

துணுக்காய் ஒட்டங்குளத்தைச் சேர்ந்த கந்தையா குமாரசாமி [வயது 46] என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் மானிப்பாயில்இயங்கும்யாழ். போதனா ஆஸ்பத்திரியில் வியாழனன்று சேர்க்கப்பட்டார். (உ-15)

## திருமணப்பதிவாளர்

யாழ்ப்பாணம், அக். 7

எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு, காரைநகர் அடங்கிய தீவுப் பகுதிகளுக்கான திருமணப் பதிவாளராகக் காரைநகரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அரசசேவையில் 35 வருடகாலம் இவர் சேவை ஆற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## 'வலம்புரி'யை மீளப்பெற முயற்சி

நெடுந்தீவு, அக். 7

இராணுவத்தினரால் கொண்டுசெல்லப்பட்ட நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் உள்ள புதிய படகான 'வலம்புரி'யை மீளப் பெற்றுத்தருமாறு நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளது. [இ-111]

## கூட்டுறவு அபி. சங்க உறுப்பினர்

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் இயங்கும் பொருட்டு மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. வி துரைசிங்கம் (திட்டமிடல் அதிகாரி), திரு எஸ். லிங்கநாதபிள்ளை, திரு. எம் கதிர்காமநாதன் ஆகியோரே இம் மூவரும் ஆவர். (இ-3)

## நான்கு மாதங்களாகச் சம்பளம் இல்லை

முல்லைத்தீவு, அக். 7

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்குக் கடந்த நான்கு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவில் கல்வி அலுவலகம் இயங்குவதில்லை. கல்வி அதிகாரிகள் வேலைக்கு சமுகமளிப்பதில்லை. இதன் காரணமாகவே சம்பளம் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. [இ - 3]

## திங்கள் முதல் நூலகங்கள்

யாழ்ப்பாணம், அக். 7

யாழ். மாநகரசபையின் கீழ் இயங்கும் நூலகங்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பொதுமக்களின் பாவனைக்காக திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆரம்ப நடவடிக்கையாக யாழ். மாநகரசபையின் கீழ் இயங்கும் நூலகங்கள் காலை 9 00 மணி முதல் பிற்பகல் 2 00 மணி வரை திறந்திருக்கும். வியாழன் காலை நல்லூர் இந்து விடுதியில் [illegible] (இ-6)

# மாங்குளம் வங்கிக் கிளையில் தளபாடம் - ஆவணம் மாயம்

மாங்குளம், அக். 7

மாங்குளம் இலங்கை வங்கிக் கட்டடம் பொம்மர் தாக்குதலில் சேதமடைந்ததை அடுத்து அங்குள்ள தளபாடங்கள், முக்கிய ஆவணங்கள் காணாமற் போய் விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி திருட்டுக் கும்பல்களே இதனைச் செய்திருக்கலாமென நம்பப்படுகிறது.

தற்போதைய சூழலில்இந்த வங்கியை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலையை அங்கு காண முடியவில்லை. இந்த வங்கியை ஒலுமடுப் பகுதிக்கு இடம் மாற்ற வேண்டுமென வாடிக்கையாளர்கள் பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (இ-94)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி



## அப்புத்துரை குணரட்ணம்

(தபால் திணைக்கள அத்தியட்சகர், முல்லைத்தீவு மாவட்டம்)

அன்னையின் மடியில்: 09 - 01 - 1936
அநியாயத்தின் பிடியில்: 28 - 08 - 1990

மண்ணில் தோன்றி நின்று மாண்புறு பணிகளாற்றி
நண்ணிய உயர் பதவி நயத்துடன் அரசால்பெற்று
கண்ணியமுடனே கருமமாற்றிடு வேளை தன்னில்
எண்ணியே மனைவி மக்கள் காணவே வீடு செல்லப்
பற்றுடன் வரும் பொழுது பாதகர் குண்டினாலே
உற்றனை படு காயந்தான்,
ஊர் வந்து சேர்ந்த பின்னே
நீத்தனை உடலையந்தோ எங்கள் உள்ளச்
சோதியும் மறைந்து சோகம் நிறைந்ததே அப்பா
மணம் வீசி நின்ற குணரத்தினமே எங்கள் மன்னா

எங்கள் அன்புச் சோதியின் ஈமக்கிரியைகளில் கலந்து, சகல உதவிகளையும், அனுதாபச் செய்திகளையும் வழங்கிய அன்னாரின் சக ஊழியர்களிற்கும் உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் எமது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி பத்மராணி குணரட்ணம்,
பிள்ளைகள்.

ஐயனார் கலட்டி வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
[14370]

# மரண அறிவித்தல்

## திரு. பொன். பாலசுந்தரம்(J.P)

தொண்டைமானாறு முன்னாள் கிராம விதானையாரும், சமாதான நீதவானுமாகிய(J P) திரு பொன். பாலசுந்தரம் அவர்கள் 3-10-1990 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசநாயகியின் அன்புக் கணவரும்; சறோஜினி, கமலோஜினி, மீனலோஜினி, விமலலோஜினி, பத்மலோஜினி, சிலோஜினி, ஹரிச்சந்திரா, ஜெயச்சந்திரன், ஞானச்சந்திரன், பாலச்சந்திரன், இராமச்சந்திரன், யோகச்சந்திரன், பிறேமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்; காலஞ்சென்ற சக்திவேல், திருவாளர்கள் தேவராஜா, அருணகிரி, புஷ்பலிங்கம், நாகேஸ்வரன், கிருஷ்ணகுமார், வசந்தா, விஜயலக்சுமி, இரட்ணகாந்த, ஸ்ரீசுமங்களா (காஞ்சனா), சுகந்தி, வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-10-1990 அன்று தொண்டைமானாற்றில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
பா. ஹரிச்சந்திரா

விதானை வளவு,
தொண்டைமானாறு.
[14366]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பிரிந்தவர் கூடினால்...!

ஒன்றாக இருப்பவர்கள் மனக்கசப்பு, பகைமை காரணமாக பிரிந்து விடுவது உண்டு. பிரிந்தவர்கள் கூடுவதும் உண்டு.

தனிப்பட்டவர்கள் பிரியும் போதும், பிரிந்து சேரும் போதும் ஏற்படும் மோதல்கள், பகைமைகள்; ஆராமை, இன்பம், மகிழ்ச்சி; ஆகிய உணர்வுகள் நாடுகள் பிரியும் போதும், ஒன்று சேரும் போதும் பிறக்கின்றன.

இப்போது உள்நாட்டுப் போராட்டங்கள் நடக்கும் பல உலகநாடுகளை எடுத்துக் கொண்டால் தேசங்களைப் பிரிப்பதை இலக்காக வைத்தே அவை நடைபெறுவதைக் காணலாம்.

முன்னரும் பல நாடுகள் பிரிந்ததை சரித்திரம் காட்டுகிறது இரண்டு யேமன்கள் இரண்டு கொரியாக்கள், இரண்டு வியட்னாம்கள், இரண்டு ஜேர்மனிகள் மற்றும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான், பின்னர் பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ், மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் என்று பல,

தேசிய இனங்கள் தங்களைத் தாங்களே ஆளவேண்டும், பூரண சுதந்திரம் சுயாட்சி, பூரணத்துவமான உரிமைகள் தமக்கும் வேண்டும் எனக் கிளர்ந்து தேசங்களைப் பிரிக்க முயல்வதே இப்போதைய நடைமுறையாக உருவாகி வருகிறது பிரிந்து போய், தனித்து வாழ வேண்டும். சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்ற போக்கே இப்போது உலகெங்கும் பரவி வருகிறது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில், 45 வருடங்களின் பின் இரண்டு ஜேர்மனிகளும் இம்மாதம் மூன்றாம் திகதி நள்ளிரவு ஒன்றாகச் சேர்ந்து மீண்டும் சரித்திரம் படைத்துள்ளன

இரண்டு யேமன்கள் ஒன்றிணைந்தது போலவும், இரண்டு வியட்னாம்களும் சேர்ந்துகொண்டது போலவும், ஜேர்மனிகளும் பிரிந்த பின் கூடியிருக்கின்றன

ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவின் புதிய அரசியல் சிந்தனையின் பயனாய், அவரது அரசியல் சீர்திருத்தத்தின் (பிறெஸ்ரோய்க்காவின்) பலனாக, கிழக்கு ஐரோப்பாவில் எழுந்த (கம்யூனிசத்திலிருந்து விடுபட்டு) சனநாயக அலை, மேற்குலகில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது. இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றாக இணைவதற்கு அந்த அலையே கால்கோள் இட்டது

ஒன்றுபட்ட ஐக்கிய சனநாயக ஜேர்மனி ஐரோப்பாவில் விஸ்தீரணம்கூடிய நாடாகவும் பொருளாதார பலம் உள்ள நாடாகவும், மிளிரும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனினும் 45 ஆண்டுகள் ஒரு நாடாக, ஒரு கொடியின் கீழ் வாழ்ந்த கிழக்கு ஜேர்மனியர்களில் ஒரு பகுதியினர் ஒன்றிணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்செய்தார்கள்.

காலங்கள் மாறும்போது மனிதனின் சிந்தனைகள் மாறுகின்றன. அப்போது அவன் தனக்குப் பாதிப்பு ஏற்படுத்திய வாழ்க்கைக் கோட்பாடுகளை, அரசியல் சித்தாந்தங்களை எல்லாம் மாற்றிக் கொள்கிறான். பிரிவும், ஒன்றிணைவும் அவனது சிந்தனைப்போக்கைப் பொறுத்தவையே.

# பல்வேறு இடர்களுக்கு மத்தியிலே

# வவுனியா-கொழும்பு ரயில் பயணம்

வவுனியா, அக். 7

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வவுனியா வரையிலான யாழ்தேவி ரயில்சேவை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அதிகாலை 5 45 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் யாழ்தேவி பகல் 11மணிக்குப் பின்னர் வவுனியாவை வந்தடைந்ததும் தாமதமின்றி பயணிகளை ஏற்றிக் கொண்டு திரும்பிச் செல்கின்றது.

வவுனியாவில் இருந்து ரயிலில் பயணம் செய்வதற்காக-கொழும்பு செல்பவர்கள், சின்னப்புதுக்குளம் ராணிமில் இராணுவ தடை முகாம், இறம்பைக்குளம் தடை முகாம் போன்றவற்றில் நிறுத்தி வைக்கப்பட்டு, வாகனங்களில் இராணுவ பாதுகாப்புடன் வவுனியா தமிழ் மகாவித்தியாலய அகதி முகாமுக்குகூட்டிச் செல்லப்படுகின்றனர். அங்கு ஓர் இரவைக் சழித்த பின்னர் வாகனங்களில் ரயில் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்.

புதன்கிழமை ரயிலில் வந்த பயணிகள் அனைவரும் அகதிமுகாமுக்கு பஸ்களில் ஏற்றிச்செல்லப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டு, வியாழக்கிழமை காலையே தமது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டார்கள்.

வவுனியா நகரிலும், புறநகரப்பகுதிகளிலும் வசிப்பவர்களுக்கு கூட இந்த விதிகளில் இருந்து விலக்களிக்கப்படவில்லை.

எனினும் முதல் நாள் செவ்வாய்க்கிழமை ரயிலில் வந்த பயணிகளில் வவுனியா வாசிகள் ரயில் நிலையத்திலிருந்து நேரடியாக தங்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்

வெளிமாவட்டத்துக்குச் செல்ல வேண்டியவர்கள் பஸ்கள் - மூலமாக பாதுகாப்பாக - சின்னப்புதுக்குளம் வீதித் தடைமுகாமில் கொண்டு சென்று விடப்பட்டார்கள்.

வவுனியா ரயில் நிலைய அதிபர் மற்றும் அதிகாரிகள் இன்னும் கடமைக்குத் திரும்பவில்லை. சிற்றூழியர்கள் சிலர் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள்.

நிலைய அதிபர் மற்றும் அதிபர்கள் கடமைக்குச் சமூகம் அளிக்க முடியாத நிலை நிலவுவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில், வவுனியாவில் இருந்து முதல் நாள் பயணம்செய்தவர்களுக்கு மதவாச்சியில் வைத்தே டிக்கட்டுகள் வழங்கப்பட்டன.

புதன்கிழமை தொடக்கம் விசேட அதிகாரி ஒருவர் மதவாச்சியில் இருந்து ரயிலிலேயே வந்து பத்துப் பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து பணத்தைப் பெற்றுக் கொண்டு டிக்கட்டுக்குப் பதிலாக ரசீது வழங்கும் நடைமுறை ஏற்படாகியிருந்தது.

தற்போது ரயில்வேயின் மாவட்டப் பொறியியலாளர் திரு ஆர். எம் ஜி. ஜினதாஸா போர்மன் திரு டி. கோடிகம ஆகிய உயரதிகாரிகள் ரயில் நிலைய பகுயில் தங்கியுள்ளார்கள்.

இதே வேளையில் மதவாச்சி தொடக்கம் வவுனியா வரையில் உள்ள மதகுகள், பாலங்கள் மற்றும் முக்கிய ஸ்தாபனங்களில் ஊர்காவல் படையினர் பொலீஸார் மற்றும் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். [இ-154]

## அரச ஊழியர் கஷ்ட நிவாரண அலவன்ஸ்

யாழ்ப்பாணம், அக் 7

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரண அலவன்ஸ் வழங்குவது தொடர்பான சுற்று நிருபம் யாழ் செயலகத்துக்கு வந்துள்ளது

37/90 இலக்க முடைய அந்த சுற்று நிருபத்தின் பிரகாரம் ஜூன் மாதம் 11 ஆம் திகதிக்கு பின்னர் சுமுக நிலை ஏற்படும் வரை வேலைக்கு சமூகமளித்தவர்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# குடாநாட்டிற்கு இவ்வாரம் சுழற்சிமுறை மின் கிடைக்கும்

யாழ்ப்பாணம், அக். 7

யாழ். குடாநாட்டிற்கு சுழற்சி முறை மின்சாரம் இவ்வாரத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலிருந்து 33 கே.வி மின் இணைப்புஊடாக குடாநாட்டிற்கு மின்சாரத்தை விநியோகிக்க முயற்சி எடுக்கப்பட்டுவருவது தெரிந்ததே

கிளிநொச்சியிலிருந்துகோப்பாய் வெளிவரை மின்சாரத்தை பெறும் பரீட்சார்த்த முயற்சியில் நேற்று முன்தினமே இலங்கை மின்சார சபை வெற்றி கண்டிருப்பதாக அவர் சொன்னார்.

குடாநாட்டிற்கான 33 கே. வி மின் இணைப்பை சீர் செய்தாலும் பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் சிக்கல் இருப்பதாக அவர் சொன்னார்.

### பல்கலைக்கழக உப மின் நிலையம்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரை, 33 கே. வி மின்சாரத்தை 11 கே வி மின்சாரமாகமாற்றும் மூன்று டிரான்ஸ் போமர்களும் யாழ் பல்கலைக்கழகத்தின் பின்புறத்தில் உள்ளன அவற்றிலிருந்து 'டிரான்ஸ்போமர் ஓயில்' திருடப்பட்டிருப்பதால் அவை இயங்க முடியாத நிலையில் உள்ளன.

ஆகவே இந்தப் பகுதியில்— பல்கலைக்கழக உப மின் நிலையக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்— முப்பது டிரான்ஸ் போமர்களுக்கு மின் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது.

யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள முப்பது டிரான்ஸ்போமர்களும் 'ஓயிலு'டன் நல்ல நிலையில் இருந்தாலும்— பல்கலைக்கழகப் பகுதியில் உள்ள மூன்று டிரான்ஸ் போமர்களும் செயற்பட முடியாத நிலையில் இருப்பதால் இந்த முப்பது டிரான்ஸ்போமர்களுக்கும் மின் விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது.

இதேபோன்ற சிக்கல் குடாநாடு முழுவதும் இருப்பதாக அவர் சொன்னார்.

இதே சமயம் கிளிநொச்சியிலிருந்து வரும் 33 கே. வி. மின்சாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நிலையம் ஒன்று குடாநாட்டினுள் அவசியம். இல்லாவிடில்இங்குள்ளஇணைப்பில் எங்கேயாவது மேலதிக மின்சாரம் பாவனைக்கு உள்ளாகும் போது கிளிநொச்சியில் உள்ள தானியங்கி ஆளி (ஒருவகை "டிரிப் சுவிச்"), செயற்பட்டு மின்விநியோகம் தானாகவே துண்டிக்கப்படும்

### சுன்னாகத்தில்

இத்தகைய சந்தர்ப்பங்களில் மீண்டும் விநியோகத்தைச் சீர்செய்வதற்கோ அல்லது மற்றைய நடவடிக்கைகளுக்கோ கிளிநொச்சி மின் நிலையத்துடன் உடன் தொடர்பு கொள்ள வசதி ஏதும் இல்லை. கிளிநொச்சிக்கு உடனடியாகச் செல்லவும் முடியாது

ஆகையினால் 33 கே. வி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஒரு டிரான்ஸ்போமருக்கு $8\frac{1}{2}$ பீப்பாய் 'ஓயில்' தேவை

யாழ்ப்பாணம், அக் 07

ஒரு டிரான்ஸ்போமருக்கு புதிதாக "ஓயில்" நிரப்புவதாயின் அதற்கு எட்டரை பீப்பாய் [சுமார் ஆயிரத்து 700 லீற்றர்] ஓயில் தேவைப்படும்.

இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் இத் தகவலை தெரிவித்தார்.

குடாநாட்டில் பெரும்பான்மையான டிரான்ஸ்போமர்களில் இருந்து 'ஓயில்' திருட்டுப் போயுள்ளது. அவற்றுக்குப் புதிதாக 'ஓயில்' நிரப்பினால்தான் சுழற்சி முறை மின்சாரத்தையாவது சீராக விநியோகிக்க முடியும்.

இதற்கு நூற்றுக்கணக்கான பீப்பாய் டிரான்ஸ்போமர் ஓயில் தேவைப்படும். கொழும்பிலிருந்து இதனை உடனடியாகத் தருவிக்க வாய்ப்புகள் இல்லை - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [உ]

# எவர் வலையிலும் விழாது, எதிர்பார்ப்புகள் இன்றி நடத்தும் போராட்டமே வெற்றி அளிக்கிறது

### திருவில் கூட்டத்தில் யோகி

யாழ்ப்பாணம், அக் 7

'எந்த எதிர்பார்புகளும் இன்றி, எவரின் வலையிலும் விழாமல் விட்டுக்கொடுக்காத நிலையில் நாம் நடத்தும் போராட்டமே வடக்கு- கிழக்கு மாகாணம் தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பதை இந்தியாவும் இலங்கையும் ஏற்கக் காரணமாக இருந்தது. அத்துடன் சர்வதேச அரங்கிலும் எமக்கு அங்கீகாரம் கிடைத்தது'

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி இப்படிக் கூறினார்.

திருவிலில் நடைபெற்ற12 போராளிகளின் மூன்றாவது நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

நண்பர்களாக - [illegible] பெற்றுத்தரும் உதவியான[illegible]ராக - நாம் நம்பிய இந்தியா செய்த பெரும் கைமாறு 12 போராளிகளையும் வீணாக இறக்கச்செய்தது தான்.

அந்தப் போராளிகளின் தியாகத்தின் அடிச்சுவட்டில் நின்று வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி அவர்களை வெளியேற்றினோம்.

### முற்றுகையிட்டு மோதும் படை

இன்று நாம் மரபு வழி வந்த இராணுவம் அல்ல. மறைந்து இருந்து தாக்கும் கரந்தடி படையும் அல்ல. படையினரை தேடிச்சென்று, முற்றுகையிட்டு மோதும் [illegible]யாக நிற்கிறோம். எமது பிரதேசத்தின் எல்லைகளை, மக்களைக் காக்கும் தமிழனின் தேசியபடையாக இன்று நாம் நிற்கிறோம்.

இந்தியா எமக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் தீர்வு ஒன்றை ஏற்படுத்த எடுத்த முயற்சியில் வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்றுக் கொண்டது.

### பிரபாவை சந்தித்த போது...

சமீபத்தில் தலைவர் பிரபாகரனை சந்தித்த போது அவர் ரஷ்யாவின் "ஸ்ராலின் கிறேட்" முற்றுகையை பற்றிய புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தார்.

அந்த முற்றுகையில் 2 கோடி மக்கள் இறந்தனர். கட்டடங்கள் தரைமட்டமாகின. வாகனங்கள் சிதைந்தன. விடுதலை கிடைத்தது. அழியாமல் வீரத்துடன் நின்றவர்கள் அந்த மக்கள் தான்.

அதே போன்று தான் நாமும் கோட்டையில் போராடினோம். உடைந்த கட்டடங்களையும், சிதைந்த் வாகனங்களையும் அரணாகப் பாவித்து, விட்டுக் கொடுக்காது, உறுதியாகப் போராடி வெற்றி கண்டோம். இன்று புலிக்கொடி பறக்கிறது அங்கே.

எமது உறுதியான விட்டுக் கொடாத இந்தபோராட்டத்துக்கு மக்கள் பங்களிப்புதான் அவசியமானது இப்படி அவர் கூறினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் இடத்துக்கு சிங்களவரை நியமிக்க முயற்சி

திருகோணமலை மாவட்டத்தில் மாகாண சபை உட்பட மற்றைய திணைக்களங்களில் கடமையாற்றி வேலைக்கு திரும்பாதவர்களின் பதவிகளுக்கு சிங்களவர்களை நியமிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

இதற்காக சகல அரச திணைக்களங்களிலும் உள்ள வெற்றிடங்கள் பற்றிய விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் திருகோணமலை அரச அதிபரும், மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியும் தற்போது ஈடுபட்டுள்ளனராம்.

# மக்கள் வங்கி நகரக்கிளைகள் கன்னாதிட்டியில் இயங்கும்

யாழ்ப்பாணம், அக் 7

யாழ். நகரத்தில் உள்ள சகல மக்கள் வங்கிக்கிளைகளும் நாளை திங்கட்கிழமை முதல் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளைக் கட்டடத்தில் இயங்கவிருக்கின்றன.

மக்கள் வங்கி உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

கன்னாதிட்டி கிளையும், மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயமும் ஏற்கனவே செயற்படுவது தெரிந்ததே.

ஸ்ரான்லி வீதிக்கிளையில் இதுவரை இயங்கிவந்த நவீன சந்தை, பிரதானக் கிளைகளும் திங்கள் முதல் கன்னாதிட்டியில் இயங்கும்.

ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, நவீன சந்தை கிளைகளே கன்னாதிட்டியில் இயங்கவிருக்கின்றன.

(இ-3-7)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. த. சச்சிதானந்தன்

(நீர்வேலி பிரசித்த நொத்தாரிசு)

எங்கள் குடும்பத்தின் மணிவிளக்கே!
எங்கள் அருமைத் திருமணியே! உங்களது 3ஆவது ஆண்டு நினைவு அஞ்சலியாகிய இன்று தங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

அன்பு மனைவி,
மக்கள், மருமகன்.

[13877]

## மரண அறிவித்தல்கள்

### கேசன் சிதம்பரன்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காரைநகர் மருதடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கேசன் சிதம்பரன் 05-10-90 இல் காலமானார். அன்னார் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், அம்பலம் [நீர்ப்பாசன மாவட்டப் பொறியியலாளர் புத்தளம்], திருமதி மனோன்மணி மார்க்கண்டு குமாரவேலு [உதவித் தபாலதிபர் கொட்டாஞ்சேனை], பழனிமலை [B Sc. கணணி உத்தியோகத்தர் கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமாவதி B. A. மார்க்கண்டு O M. C Arts சற்குணதேவி B. A. ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஸ்ணகோபி, டிலானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [நேற்று] 06-10 90 சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழையகண்டி,
காரைநகர்.

தகவல்:
ஒ. மார்க்கண்டு

[14384]

### சேதுராமலிங்கக் குருக்கள் பீதாம்பரக் குருக்கள்

( அல்வாய் )

சேதுராமலிங்கக் குருக்கள் - பீதாம்பரக் குருக்கள் 6-10-90 சனிக்கிழமை காலமானார். இவர் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குருக்களின் பாட்டனாராவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [ 7-10-90 ] ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகப் பருத்தித்துறை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் :
ச. தியாகராஜக் குருக்கள்

முத்துமாரி அம்பாள் ஆலயம்,
அல்வாய்.

[13880]

## சீ-நோர் ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 7

சீ-நோர் ஸ்தாபனத்தின் குருநகர், காரைநகர் ஊழியர்கள் அனைவரையும் நாளை திங்கள் காலை 8.00 மணிக்கு குருநகர் தொழிற்சாலையில் சமுகமளிக்கும்படி பிரதிப் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (உ-6)

## கிழக்கில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான குடிசைகள் வெறுமனே காணப்படுகின்றன.

தப்பி ஓடிய அகதிகளில் அனேகமானோர் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே உள்ள படுவான்கரை பிரதேசத்தின் காட்டுப் பகுதிகளுக்கும் வயல்களுக்கும் சென்றிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவித்தன.

படுவான்கரைக் காடுகளில் மரங்களுக்குக் கீழேயும் வயல் பிரதேசங்களில் சிறுவாடிகளிலும் தற்போது அகதிகள் தங்கியுள்ளனர்.

வந்தாறுமூலையிலிருந்து புறப்பட்டு பல மைல் தூரம் நடந்து பன்குடாவெளி, கன்னன்குடா ஆகிய துறைகளைக் கடந்து மட்டக்களப்புக்கு சாரிசாரியாக வந்து சேர்ந்த ஒருதொகுதி அகதிகள் அங்குள்ள பாடசாலைக் கட்டடங்களில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் 5ஆம் பிரிவு, செங்கலடி, கொம்மாதுறை, வந்தாறுமூலை, களுவங்கேணி, சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, கோரகல்லிமடு, கிரான், கரடியனாறு, சவுக்கடி, தளவாய் ஆகிய கிராமங்களைச்சேர்ந்த சுமார் 44 ஆயிரம் தமிழர்கள் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக அகதி முகாமில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இவர்களும் சித்தாண்டி முருகன் ஆலயத்திலிருந்த 19 ஆயிரத்து 121 பேரும், கிரான் ஆச்சிரமத்திலிருந்த 864 பேரும், கோரகல்லிமடு பாடசாலையிலிருந்த 1504 பேருமே தற்போது அகதி முகாம்களிலிருந்து வெளியேறி இருக்கிறார்கள்.

அகதி முகாம்களை விட்டு தமிழர்கள் வெளியேறியதை அடுத்து வாழைச்சேனை—மட்டக்களப்பு பிரதான பாதை ஓரங்களில் மனித நடமாட்டத்தைக் காண்பதே அரிதாகவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மாகாண.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்குத் திரும்பிய பதில் செயலாளர் ஒருவருக்கு இப்படி அதிர்ச்சிதரும் கடிதம் அங்கு இருந்ததாம்.

அந்தக் கடிதத்தை உடைத்தபோது, 'நீர் வேலையை இழந்தவராகக் கருதப்படுகிறீர்' என்று குறிப்பிடப்பட்டு இருந்ததாம்.

ஆனாலும் அந்த அதிகாரி அங்கு உயர்அதிகாரிகளின் சிபார்சுடன் தற்சமயம் கடமையாற்றுகிறார்.

இதேபோன்ற அதிர்ச்சிக் கடிதங்கள் மற்றவர்களுக்கும் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## குடாநாட்---

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மின் இணைப்பூடான விநியோகத்தைக் கட்டுப்படுத்த சுன்னாகத்தில் தனி மின் விநியோக அமைப்பை ஏற்படுத்தவும்—

அதனூடாகவே குடாநாட்டிற்கான சுழற்சி முறை மின்சாரத்தை விநியோகிக்கவும் [illegible]

இதற்கு [illegible] எடுக்கலாம்— என்றும் அவர் சொன்னார். (உ)

# பஸ் உரிமையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 7

வட பிராந்திய மினிபஸ் சங்கத்தில் தூரசேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கள் காலை 10 மணிக்கு தாவடியில் உள்ள தற்காலிக தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

இதேசமயம்—

தமது பஸ்களை வவுனியாவுக்கு சுழற்சி முறையில் சேவையில் ஈடுபடுத்தும் பஸ் உரிமையாளர்கள் இன்று ஞாயிறு காலை முத்திரைச் சந்தை பஸ் நிலையத்தில் சந்திக்குமாறு தனியார் மினி பஸ் சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராஜா கேட்டுள்ளார்.

சுழற்சி முறையில் சேவையில் ஈடுபட வேண்டிய பஸ்கள் தமது சேவையை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவற்றின் இடம் வேறு பஸ்களுக்கு வழங்கப்படும் என்றும்—

புறநகர் சேவைகளை சகல பஞ்சாயத்து சபைகளும் ஆரம்பிக்க வேண்டும் என்றும்—

கேரதீவு, கிளிநொச்சிப் பகுதிகளுக்கு தமது பஸ்களை சேவையில் ஈடுபடுத்த விரும்பும் பஸ் உரிமையாளர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார். (உ-6)

# இந்தியா - பாக். - இலங்கை ஒன்றாக செயற்பட வேண்டும்

## அத்வானியின் விருப்பம் இது!

புதுடில்லி, அக், 7

ஜேர்மனிகள் மீண்டும் ஒரு நாடானது போல், பிரிந்து சென்றுள்ள இந்தியவும் பாகிஸ்தானும் மீண்டும் ஒரு நாடாக வேண்டும்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி முன் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் ஸ்திர நிலை நிலவ இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் ஒரே அமைப்பின் கீழ் செயல்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சொன்னார்.

[உ-எ]

# படையினர் அட்டகாசம்; நெரிசலில் 10 குழந்தைகள் பலி!

யாழ்ப்பாணம், அக். 7

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வீரமுனை, வீரச்சோலைப்பகுதியை சமீபத்தில் சுற்றிவளைத்த இராணுவமும், ஊர்காவல் படையினரும் மேற்கொண்ட கெடுபிடி நடவடிக்கைகளினால் கோவில்களில் தங்கியிருந்த அகதிகளின் 10 குழந்தைகள் நெரிசலில் சிக்கி பலியாகினர்.

அம்பாறையில் இருந்து மூன்று மாதங்களின் பின் யாழ்ப்பாணம் வந்த ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அப்பகுதியை முற்றுகையிட்ட படையினர் அங்கிருந்த சகலரையும், பாடசாலையிலும், இந்துக் கோவில்களிலும் கூடுமாறு பணித்தனர்.

பின்னர் பிள்ளையார் கோவிலில் இருந்தவர்களைச் சோதனையிட வந்த படையினர் அங்கு செய்த அட்டகாசத்தால் கோயிலில் தஞ்சம் புகுந்த மக்கள் பீதியில் கலைந்து ஓடினர். இந்த நெரிசலில் 10 குழந்தைகள் பலியாகின. அங்கிருந்த இளம் குடும்ப மாது ஒருவரும் சூட்டுக்கு பலியானார் என்றார் அவர். (உ-3)

# வன்னி மாவட்டத்தின் அரச ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 7

குடாநாட்டில் தங்கியுள்ள முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் கடமை புரியும் அரச ஊழியர்களை நாளை திங்கள் காலை 10 மணிக்கு யாழ். செயலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்களம், வங்கி ஆகியவற்றில் பணியாற்றுவோர், ஆஸ்பத்திரி ஊழியர்கள், தாதிகள், டாக்டர்கள் ஆகியோருக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## குடியிருப்பு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காரைநகர் செல்வதற்கு இராணுவத்தினர் நேற்று முயன்றனர்.

இதற்கிடையில் காரைநகர் கடலிலிருந்தும், ஊர்காவற்றுறைக் கரையோரங்களில் இருந்தும் பலத்த பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் வேறு கிராமங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். [அ-7]

## திருமலைக்குக்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நான்கு மணிக்கு முன்பதாக சுன்னாகம் தபால் நிலையத்தில் ஒப்படைக்குமாறு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. க. கனகசுந்தரம், தபால் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இதேவேளை திருமலை விலாசதாரர்களுக்குரிய (முத்திரை ஒட்டப்பட்ட) கடிதங்கள் இன்று காலை எட்டு மணி முதல் பி. ப. 4 மணி வரை விசேட ஏற்பாட்டின் பேரில் சுன்னாகம் தபால் நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## ஜே.வி.பி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சோமவன்ச வேறு பெயரில் வெளிநாடு செல்ல எத்தனிக்கக் கூடும் என்றும், அது குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறும் கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகளைப் பொலீஸ் அதிகாரிகள் உஷார் படுத்தி உள்ளனர்.

ஜே.வி.பியின் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்களில் திரு.சோமவன்ச அமரசிங்கா மட்டுமே உயிர்தப்பி இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சனிக்கிழமை அவர் கொழும்பில் உள்ள ஒரு வீட்டில் இருந்தார் எனவும் ஆனால் பொலீஸார் சென்ற வேளை அவரைப் பிடிக்க முடியவில்லை என்றும் —

ஆனால் அங்கிருந்து பல துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org